1994 நவம்பர் *7*]

26—

திருச்செந்தூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைத்தல்.

***34346—திரு. ஆ. செல்லதுரை:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூரில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு நிரந்தரப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் திருச்செந்தூரில் பணிமனை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. தற்பொழுது திருச்செந்தூரிலிருந்து 6 பேருந்துகள் மட்டுமே கோபி செட்டிப்பாளையம், திருப்பூர், சேலம், சென்னை மார்க்கங்களில் இயக்கப்படுகின்றது. இப்பேருந்துகளின் பராமரிப்புப் பணிகள் தூத்துக்குடி, சேலம் மற்றும் சென்னைப் பணிமனைகளில் பார்த்துக் கொள்ளப்படுவதால் திருச்செந்தூரில் தனியாக ஒரு பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஆ. செல்லதுரை: வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருச்செந்தூரைப் பொறுத்தவரை, அறுபடை வீடுகளில் ஒன்றாகும். அருள்மிகு சுப்பிரமணியசுவாமி இருந்து அருளாட்சி நடத்துகின்ற இடம். இன்றையதினம் ஏழுநாட்கள் சஷ்டி விரதம் இருந்து, நாளையதினம் அசுரனை அழித்து, சேவல் கொடி பறக்க விட்டு வெற்றிக் கொடி நாட்டிய அந்தப் புனித ஸ்தலத்தில் நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு பணிமனை இல்லை. ஏற்கனவே, திருச்செந்தூர்-பாளையங்கோட்டை ரோட்டில் ஒரு ஏக்கர் நிலம் பணிமனைக்கு அமர்த்தப்பட்டு, அது முருகன் வேட்டைக்குச் சென்று இளைப்பாறுகிற இடம் என்று சொல்லி அந்த இடத்தில் பணிமனை அமைக்க முடியாமல் விட்டு விட்டார்கள். ஆகவே,

திருச்செந்தூரைப் பொறுத்தமட்டில், பல்வேறு இடங்களிலிருந்து பயணிகள் வந்து, முருகக் கடவுளை தரிசனம் செயகிற இடம் அது. சுற்றுலா இடமாக உள்ளது. அந்த இடத்தில் ஒரு பணிமனையை அமைப்பது முக்கியம் எனக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு பணிமனையை அமைக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முருகக் கடவுளுடைய திருத்தலமாக இருக்கிற, அறுபடை வீடுகளுள் ஒன்றாக இருக்கிற, முருகன் அசுரர்களை அழித்திருக்கிற திருச்செந்தூர் பகுதியில் ஒரு பணிமனை அமைக்கப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அரசியலிலே இருக்கிற அசுரர்களை அழிக்கக்கூடிய ஆற்றல் மிக்க முதலமைச்சராக நமது புரட்சித் தலைவி அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே 6 பேருந்துகள் மட்டும் ஓடுகிற காரணத்தினால்தான், உங்களுடைய கோரிக்கையான ஒரு பணிமனையை அமைப்பது என்பது இயலவில்லை என்று குறிப்பிட்டேன். குறைந்தது 25 பேருந்துகள் இயக்கப்படுமேயானால், அங்கே பணிமனை அமைக்கப்பட்ட இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6 பேருந்துகள் ஓடுகிற காரணத்தினால், அமைச்சர் அவர்கள், அங்கே பணிமனை அமைக்க இயலவில்லை என்று சொன்னார்கள். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இன்னும் 10 பேருந்துகள் விட்டாலும், அங்கே நிரம்பி வருகிற அளவுக்குப் பயணிகள் இருக்கிறார்கள். சொல்லப்போனால், இன்று தனியார் பேருந்துகள், அந்தப் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 10 பேருந்துகள் சென்னைக்கு வந்து கொண்டிருக்கின்றன. அந்த அளவுக்குப் பயணிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால், நீங்கள் அதிகமான பேருந்துகளை விட்டு, அங்கே ஒரு பணிமனையை உருவாக்கித் தரவேண்டும். இன்றைக்கு அங்கே இருக்கிற பேருந்துகள், சில சமயங்களில் பழுதாகுமேயானால், அவற்றை சாலையோரங்களிலே விட்டுத்தான், அந்தப் பழுதுகளை நீக்குகிறார்கள். அவர்களுக்கென்று ஒரு பணிமனை இலலாமல் அந்தப் பேருந்துகள் எல்லாம் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,

1994 நவம்பர் 7]

அந்த உணர்வுகளை எண்ணி உடனடியாக ஒரு பணிமனையை அங்கே துவக்க முன்வருவாரா; பணிமனையை அமைத்துத்தர முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பணிமனையை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 25 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ஆகவேதான், 6 பேருந்துகள் இயக்கப்படுகிறபோது, அது தேவையில்லை என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு, கூடுதல் எண்ணிக்கையுள்ள பேருந்துகள் அங்கு விடுகிறபோது, அந்த எண்ணிக்கை 25-ஐத் தாண்டுகிறபோது, அங்கே பணிமனை அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 27, திருமதி கே. எம். கலைச்செல்வி, இருக்கையில் இல்லை.

வினா எண் 28, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

28—

சேலத்தில் ரெடிமேட் ஆடை ஏற்றுமதி மையம் ஏற்படுத்துதல்

*24026–திரு. கே. **கந்தசாமி**:

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் ரெடிமேட் ஆடை ஏற்றுமதி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளிலிருந்து ரெடிமேட்